**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

**O.S. No. 266 of 2022**

Deposition of **P.W. 1**

Name of the Witness: *திருமதி.சுபத்ரா*

Date **:14.02.2024**

***குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

***5) கிரைய ஒப்பந்தப்படி 31 சென்ட்டும் கூடுதலாக 5 சென்ட்டும் விற்பதாக ஒப்புகொண்டு பணத்தை பெற்று கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2021 டிசம்பர் மாதம் நான் பிரதிவாதி வீட்டிற்கு போகவில்லை. பிரதிவாதி பேரில் ஏ.பள்ளிபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரிலும் நானும், எனது உறவினரும் எஸ்.ஐ பாலுவை அழைத்து கொண்டு பிரதிவாதி வீட்டிற்கு போனோம் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் வீட்டிற்கு போலிசாருடன் சென்று கிரைய ஒப்பந்தத்தை கொடுக்கவில்லை என்றால் தீக்குளித்து இறந்து விடுவதாக மிரட்டினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி .ஏற்கனவே இதய நோயாளி என்பதால் அவருக்கு உடல்நிலை மோசமானது என்றும் அதனால் அவரது மனைவி பயந்து கிரைய ஒப்பந்தத்தை என்னிடம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் அசல் எங்களிடம் உள்ளது. அது எப்படி வந்தது என்று எனக்கு***

தெரியாது. நடேசனிடம் கிரைய ஒப்பந்தம் போட்டு 16 லட்சம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும் என்பதால் தான் பிரதிவாதியிடம் கிரைய ஒப்பந்தம் போட்டு பணம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

6) பிரதிவாதியிடம் ரூ 16 லட்சம் பணம் வாங்கி அதை நடேசனிடம் கொடுத்து விட்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களிடம் வந்து கிரையம் செய்து கொள்ள கேட்டும் போது நெடுஞ்சாலை துறை 20 சென்ட் நிலத்தை கையக படுத்தி விட்டதால் கிரையம் செய்து கொடுக்க மாட்டோம் என்று தெரிவித்தோம் என்றால் சரியல்ல. அரசாங்கம் நிலத்தை கையகப்படுத்தியதால் நிலத்தை வாங்கவோ, விற்கவோ முடியாது என்றால் சரிதான். பிரதிவாதி எங்களிடம் தடையில்லா சான்று பெற்று கொடுக்க வேண்டும் சொல்லியும் நாங்கள் அவர்களிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நெடுஞ்சாலை துறை எங்கள் நிலத்தில் 13 சென்ட் கையகப்படுத்தியுள்ளார்கள். அதற்கு அரசாங்கம் ரூபாய் 20 லட்சம் ஒதுக்கியுள்ளார்கள் என்றால் ரூ.13,06,000/- தான் ஒதுக்கியுள்ளார்கள். நெஞ்சாலை துறை தாவா சொத்தை கையகப்படுத்திய பிறகு அதற்கான நஸ்டஈடு தொகையை நாங்களே பெற்று கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலும், பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்திலும், அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு

தடையில்லா சான்று வழங்கமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டே பிரதிவாதியிடம் தடையில்லா சான்று வாங்கிவந்தால் பிரதியிடம் கிரையம் செய்து கொடுக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் மூலபத்திரம் பொய்யாக காணாமல் போய்விட்டது என்று செய்திதாளில் விளம்பரம் கொடுத்தேன் என்றா் சரியல்ல. பிரதிவாதியுடன் தாவா சொத்தை விற்பதாக ஒப்புக்கொண்டு பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்து விட்டு அதை மறைத்து பதிவு செய்யப்படாத இரண்டு கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றும் அதை மறைத்து பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா சொத்தின் பேரில் பல நபர்களிடம் பணம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் சட்டப்படியும், நியாயபடியும் பிரதிவாதியிடம் பாக்கி கிரைய தொகையை வாங்கி கொண்டு அவருக்கு கிரையம் செய்து கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல. கிரையம் செய்வதற்கு கால தாமதமே நான் தான் என்றால் சரியல்ல. அதனால் தாவா பிரதிவாதியின் செலவு தொகையுட்ன தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.